# தமிழ் இலக்கியத்தில் காணலாகும் அழகியல் கூறுகள்

*முனைவர். அ.பாக்கியமுத்து*
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறை தலைவர்
தமிழ்த்துறை, திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5014

## முன்னுரை

மனிதன் அவனைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலைக் கண்டு மகிழத் தொடங்கிய அன்றே அழகுணர்ச்சியும் அரும்பியது எனலாம். அழகு என்ற சொல்லாட்சியின் வீச்சும், பயன்பாட்டும் பரந்துபட்டது. அழகு என்ற சொல், பொருள் வரையறைக்கு உட்படாதது. "அழகு என்பது காண்டலும் கற்பனை அனுபவமுமே"[1]. என்று அழகியல் கொள்கையாளர் கூறுவர். இந்த அடிப்படைக் கருத்தை இடைக்கால உரையாசிரியரான "பேராசிரியர் மிகவும் தெளி வாய்க் கூறியுள்ளார் அவர், திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை, நோக்கம் என்றது அழகு"[2] ஆகும் என்று கூறுகின்றார். அழகியல் என்ற செ ால் அழகான பொருளை மட்டும் குறிப்பதன்று ஒவ்வொருவரின் பார்வையிலும் அழகு வேறுபடலாம். "அழகு என்பது ஆழ்ந்த பொருளில் இல்லை, ஆழந்த உள்ளத்தில் இருக்கிறது"[3] என்று வாழ்வியம் களஞ்சியம் பொருள் தருகிறது. மேலும், "அழகு என்பது அனுபவமே அல்லாது அனுபவிக்கப்படும் பொருள் அன்று அது காணப்படும் பொருளில் இல்லை. காண்பவர் தம் கருத்தில் இருக்கிறது"[4] என்பர். அழகியல் இன்பமயமான உள்ளக் கிளர்ச்சி யை ஏற்படுத்துவது புனையப்படும் பொருளின் அழகையோ, அழகின்மையையோ சார்ந்ததன்று, தனிப்பட்ட மனிதனின் உள்ளத்தைச் சார்ந்தது. அத்தகையவனைக் கலைஞன் என்று கூறுவர். அத்தகைய அழகியல் கூறுகளை விளக்குவதே இக்கட்டுரையின் சிறப்பாகும்.

## அழகின் நிலைக்களன்கள்

அழகினை வேண்டுவோர் இயற்கை வாழ்வு வாழ வேண்டும் என்ற விளக்கத்தை அடிப்படையாகக் கொள்வர் என்று கூறலாம். அழகின் தன்மையையும் பயனையும், "உள்ளதை உள்ளவாறு கூறுவதும் உள்ளதை உள்ளவாறே ஏற்பதுவும் அழகியன் அடிப்படை. இங்கே உள்ளது, உள்ளவாறு எனப்படுபவை உணர்த்தும், உணர்த்தவாறும் ஆகும். எனவே அழகு என்பது உண்மை, உண்மை நன்மையே தரும். நன்மை இன்பம் தரும். இன்புறுத்துவது அழகாகும்"[5] என்பர்.

அழகியல் இருவகைக் கண்ணோட்டங்களை நிலைக்களன்களாகக் கொண்டுள்ளது. அவை. வாழ்வியற் கண்ணோட்டம், கலைக்கண்ணோட்டம் என்பனவாகும்.

**வாழ்வியற் கண்ணோட்டம்**

வாழ்வை அதன் அழகிற்காகவே போற்றுவது, அதன் உண்மையை உணர்த்துவது என்பதையே வாழ்வியற் கண்ணோட்டம் எனலாம். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற சித்தாந்தம் உடையவர்கள் சென்ற காலத்தையும், எதிர்கால நிகழ்வுகளையும் பற்றிக் கவலைப்படுவதில்லை. "வாழ்வை ஒரு போராட்டமாகக் கருதாமல் நாடகமாக் கருதுவது. தன் உணர்வுகளைக் கூட ஒரு நாடகமாகப் பார்ப்பது"[6] என்பர் ஆனால் கல்யாண்ஜி கவிதைகளில் வாழ்வை நோக்குகின்ற முறை மாறுபட்டதாக, முரணாக அமைவதைக் காணமுடிகின்றது. வாழ்க்கையை வாழவும் முடியாவும் அதனைவிட்டு விலகிச் செல்லவும் முடியாமல் தவிப்பதைக் கவிஞர்.

**"இருந்து என்ன ஆகப்போகிறது**
**செத்துத் தொலைக்கலாம்**
**செத்து என்ன ஆகப் போகிறது**
**இருந்து தொலைக்கலாம்"**

எனடறு வெளி ப்படுத்துவதன் வழி அறிய முடிகின்றது.

**கலைக் கண்ணோட்டம்**

வாழ்வின் ஒரு கூறு கலை ஆகும். வாழ்வியற் கண்ணோட்டம், கலைக் கண்ணோட்டத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது எனலாம். "அழகியல் கொள்கையின் முக்கிய அம்சங்கள் அனைத்தையும் எளிமையாகவும், சுருக்க மாகவும் திரட்டிக் கூறும் மேற்கொள் உரை ஒன்று உண்டு "கலை கலைக்காகவே" என்பதே அந்த வாசகம்"[7] என்பர். கலைக் கண்ணோட்டத்தில் இன்றியமையாத இடம் பெறுவது உருவமும், உள்ளடக்கமும் ஆகும். அவை இரண்டு பிரிக்க முடியாதவை எனலாம். ஒரு படைப்பைக் காண்பதில், அவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளலாம். உருவமும் உள்ளடக்கமும் கல்யாண்ஜி கவிதைகளில் ஒன்றிக் காணப்படுகின்றன எனலாம். "தோற்றம்" என்ற கவிதையில் அவர்.

**"வாழ்க்கை சிக்கலானது**
**அல்லது சிக்கலானது போல் தோன்றுவது**
**சுலபமானது**
**அல்லது சுலபமானது போல் தோன்றுவது**
**நான் உண்மையானவன்**
**அல்லது உண்மையானவன் போலத்**
**தோன்றுபவன்**
**என் கவிதை பாசாங்கற்றது**
**அல்லது போலத் தோன்றுவழ**
**இதுஇது**
**அல்லது**
**இது போலத் தோன்றுவது"**

அதாவது, தோற்றம் என்பதை இதுதான் என்று உறுதியாகக் கூற இயலாது என்றும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாகவே தோற்றம் காட்சி அளிக்கும் என்றும் அவர் கூறுகின்றார்.

**அழகு நோக்கு**

அழகு என்பது காணும் காட்சியில் இன்பம் தரும் தோற்றப் பொலிவேயாகும். இயற்கையின் ஒவ்வொர் அசைவிலும் அழகினைக் கண்டு இன்புற்றவர் கல்யாண்ஜி எனலாம் முருகியல் கொள்கையை, "அழகைக் கண்டனுபவிப்பதுவும் அதனை உணர்ந்து பிறருக்கு உணர்த்துவதுமே இலக்கியத்தின் பண்பு இதனை முருகியல் கொள்கை என்பர்"[8] அத்தகைய முருகியல் தன்மையின் பதிவாகக் கல்யாண்ஜியின் கவிதைகள் அமைகின்றன எனலாம். மழைக்காலம், விண்மீன், மரம், வெயில், விடிவெள்ளி, கடல், தீராத தீ, கானகம் போன்ற ஒவ்வோர் இயற்கைப் பொருளும் கல்யாண்ஜி கவிதையால் அழகுணர்ச்சியை ஏற்படுத்துவதை அறிய முடிகின்றது.

**மழைக்காலம்**

மனிதன் செயற்கையாய் அவனுடைய வசதிகளைப் பெருக்கிக் கொண்ட போதிலும் இயற்கை பல வழிகளில் அவனுக்கும் பயன்படுகின்றது. அவற்றுள் மழையும் ஒன்றாகும் எனலாம் அத்தைகய மழையைப் பாரதிதாசன்.

**"கானல் தணிக்க நல்ல மழையே வா ரூ நல்ல**
**நாடு செழிக்க வைக்க மழையே வா**
**ஆன கிணறுகுளம் ஏரி எல்லாம் ரூ நீ**
**அழகுபடுத்த நல்ல மழையே வா"[9]**

என்று வரவேற்கின்றார். மேலும் பாரதியார் மழை பெய்யும் அழகினைச்,

**"சட்ட்டசட சட்ட்டச்சட டட்ட்டா ரூ என்று**
**தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்**
**எட்டுத் திசையு மிடிய ரூ மழை**
**எங்ஙனம் வந்நத டா, தம்பி வீரா!"[10]**

என்னும் கவிதையின் வழி வெளிப்படுத்து கின்றமையைக் காண முடிகின்றது. கல்யாண்ஜீயம், அவருடைய கவிதையில்.

**விண்மீன்**

நிலவு காட்சியின்பத்துடன் உலகத்திற்குக் குளிர்ச்சியையும் தந்து மகிழ்விக்கக் கூடியது எனலாம். அத்தகைய நிலவுடன் விண்மீன்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாத் தோன்றிப் பின்னர் வான்றிறைந்து காட்சி அளிப்பதைக் காண முடிகின்றது. அந்த அழகினைப் பாரதிதாசன்.

**"மின்னாத வானில்**
**மின்னுகின்ற மீன்கள்**
**சின்ன சின்ன வயிரம்**
**தெளி த்த முத்துக்கள்**
**புன்னைகயின் அரும்பு**
**புக்காத முல்லை**
**என்ன அழகாக**
**இருந்தன மீன்கள்"[11]**

என்று கூறுகின்றார் அத்தகைய விண்மீன்களின் அழகைக் கல்யாண்ஜி.

**காலத்திற்கு அழைப்பு**

அழகு காட்சி தரும் பொருள்களில் அவற்றைக் காண்பார் கருத்திலும் குடிகொண்டிருக்கின்றது எனலாம். கல்யாண்ஜி காலத்தைத் தன்னுடன் இருந்து இளைப்பாற வரும்படி அழைக்கும் விதமாக,

**"மேக நிழல்**
**ஊர்ந்து விடும் ரூ முன்**
**ஓடுகிற காலமே என்**
**உடனிருந்து இளைப்பாறு"**

என்று பாடுவதில் அழகு வெளிப்படுவதை அறிய முடிகின்றது. ஓய்வு என்ற சொல்லையே அறியாத "காலத்தை" இளைப்பாற அழைக்கும் கல்யாண்ஜியஜன் கருத்தில் அழகு வேறுபட்டு அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

**விடிவெள்ளி**

கடற்கரையில் கதிரவனின் தோற்றத்தைக் காணக் காத்திருக்கும் மக்களுக்கு விடிவெள்ளியின் அழகு புலப்படவில்லை. புகைப்படக் கருவியுடனும், கறுப்புக் கண்ணாடியுடனும் கதிரவனின் தோற்றத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். அத்தகைய மக்களிடம் விடிவெள்ளியைக் காண ஞான விழிகள் இல்லை என்பதை அவர்,

**"வைகறையைக் கிழக்கு**
**எப்படி வரைகின்றது என்று பார்க்க**
**வந்து நின்றது**
**விடிவெள்ளி"[12]**

**மரம்**

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ், என்பது போல மரமில்லா ஊருக்கு மழை பாழ் என்று கூறலாம். மனிதனின் வாழ்வு தழைக்க மரங்கள் தழைக்க வேண்டும். தூங்கி எழும் அரத்தின் அழகினைக் கல்யாண்ஜி.

**"மனிதர்கள்**
**வாங்கி வைக்காத**
**மண்ணின் விசிறிகள்!"[13]**

என்று கூறும் மேத்தா அசை மனிதர்கள் கையில் அகப்பட்டு கைதிகள் என்னும் பொருளில்.

**“மானுடர் கரங்களில்**
**அகப்பட்டுக் கொண்ட**
**மண்ணின் கைதிகள்”[14]**

என்றும் கூறியிருப்பதைக் காண முடிகிறது.

## கலையின் அழகு

இன்றைய மக்களிடம் கலை ஈடுபாடு குறைத்து மூடநம்பிக்கைகளில் நம்பிக்கை பெருகியுள்ளதைக் காண முடிகின்றது. கலைப் பெருக்கம் மக்களிடம் வேண்டும் என்பதைப் பாரதியார்.

**“வெள்ளத்தின் பெருக்கைப் போல்**
**கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும் மேவுமாயின்**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும்**
**குருடரெல்லாம் விழிபெற்று பதவி கொள்வார்”[15]**

என்று குறிப்பிடுகின்றார். கோயின் கலை அழகினைக் காணாது கற்சிலையை வணங்கவே மக்கள் செல்கின்றனர் என்பதைக் கல்யாண்ஜி.

## முடிவுரை

அழகியின் பதிவாக அமையும் கல்யாண்ஜியின் கவிதைகளில் வாழ்வியல் கண்ணோட்டத்தையும், கலைக் கண்ணோட்டத்தையும் காண்பதோடு மட்டுமல்லாமல் மழை, விண்மீன், விடிவெள்ளி, வெயில், மரம், தங்க அரளிப்பு. காடு, தீ போன்றவற்றில் காணலாகும் அழகுகளையும் அழகியல் உணர்வுடன் கவிஞர் பாடியுள்ள திறத் தினையும் இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

## குறிப்புகள்

1. கைலாசபதி இலக்கியமும் திறனாய்வும், ப.62
2. மேலது, ப.63
3. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-1, ப.890
4. கைலாசபதி.மு.நூ, ப.65
5. மீனாட்சி முருகரத்தினம், அழகியல், ப.55
6. மேலது, ப.63
7. கைலாசபதி.மு.நூ, ப.63,34
8. மேலது, ப.55
9. பாரதிதாசன், இளைஞர் இலக்கியம், ப.7
10. பாரதியார் கவிதைகள், ப.470
11. பாரதிதாசன் கவிதைகள், ப.1098
12. ஈரோடு தமிழன்பன், பனிபெய்யும் பகல், ப.81
13. மேலது, ப.84
14. மு.மேத்தா, கண்ணீரப் புக்கள், ப.38
15. மேலது, ப.39